<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>MCOP No.193/2023</u>**

எ,ம.சா. 1 தேதி.21.07.2026

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உதயசூரியன் | த/பெ, | சுந்தரம் |
| வயது | 38 | தொழில் | சட்ட மேலாளர், ரிலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி |
| கிராமம் | திருச்சி | தாலுக்கா | திருச்சி |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு **<u>முதல் விசாரணை</u>**:-

நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கானது இரு வாகன மோதலால் ஏற்பட்டது. மனுதாரர் TN 50 P 5144 என்ற Passion Pro வாகனத்தை ஓட்டிச்செல்லும்போது விபத்து நடந்தது. மனுதாரருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் இல்லை. அது அந்த வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் தணிக்கை அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வாகனத்தை ஓட்டியபோது மனுதாரர் ஒரு இளவர் ஆவார். மேலும் மனுதாரர் தலைகவசம் அணியாமல் இருசக்கரத்தில் பயணம் செய்தார். மோட்டார் வாகன ஆய்வாளரின் தணிக்கை அறிக்கை நகல் **எ.ம.சா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்துக்கான தனது பங்களிப்பை மனுதாரர் கொடுத்துள்ளார். அதை நீதிமன்றத்தில் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-

இந்த வாகனத்தை ஓட்டியது மனுதாரர் மைனர் அல்ல வேறு ஒருவர் சக்தி என்பவர் என்றால் அவரும் மைனர் ஆவார், ஆகவே வாகனத்தை ஓட்டியது மைனர் ஆவார். மனுதாரர் அபிக்குமார் வாகனத்தில் அமர்ந்துதான் சென்றார் என்றால் இவ்விபத்துக்கு எவ்வகையிலும் பொறுப்பு அல்ல என்றால் சரியல்ல. நான் நேரடி சாட்சியத்தை விசாரிக்கவில்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.